[1975 நவம்பர் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவைகளுக்கென்று தனியாக ஒரு வாரியம் வைக்கின்ற சூழ்நிலை ஏற்படவில்லை. இவைகளை அரசாங்கப் பள்ளிகளுடன் இணைப்பதா அல்லது தனியாகவே வைத்து நடத்துவதா என்பதுபற்றித் தனியாக ஆராயப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : நகராட்சிப் பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்கள் ஒழுங்காக வேலைக்குப் போகாமல் வேறு வேலை பார்க்கிறார்கள். அப்படிச் செய்கின்ற ஆசிரியர்களை நம்முடைய அரசு கண்காணித்து ஒழுங்காக அவர்கள் வேலைக்குப் போவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒழுங்காக வேலை செய்ய வில்லை என்று ஆசிரியர்கள் அத்தனை பேரையும் ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்ட முடியாது. அப்படிப்பட்ட குறைபாடுகள் எந்தப் பள்ளியில் என்று சொல்ல முடியாது. எந்தப் பள்ளியில் இருந்தாலும், அதற்கான நடவடிக்கை களை அந்தந்தப் பள்ளியை நிர்வகிப்பவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டியவர் களாக இருக்கிறார்கள்.

Gastro-Enteritis.

* 87. *Q.*—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government are aware of the alarming increase in the incidence of gastro-enteritis among children in Madras City;

(*b*) whether the Government have identified the causes behind the sudden increase in this sickness; and

(*c*) the steps taken to remove them?

வயிறு-குடல் சார்ந்த நோய்

திரு. டி. வி. டி'மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் உள்ள குழந்தைகளிடையே வயிறு-குடல் சார்ந்த நோய் (பேதி) அச்சமிகும் அளவில் பரவியுள்ளதை அரசு அறியுமா ?

(இ) இந்த நோய் திடீரெனப் பெருகியுள்ளதற்கான காரணங்களை அரசு கண்டறிந்ததா ?

1975 நவம்பர் 7]

(உ) இந்நோய் பரவுவதற்கான காரணங்களை அகற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) நடப்பாண்டிலும், கடந்த ஆண்டிலும் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையும், குடிநீர் வழங்கு பிரச்சினையும் திடீர் அதிகரிப்புக்குக் காரணங்களாகும்.

(உ) பள்ளிகள், குடிசைக் குடியிருப்புகள் மற்றும் சுலபமாக நோய் பரவக்கூடிய பகுதிகளில் காலராத் தடுப்பு ஊசி குத்துதல், நீர் நிலைகளில் குளோரின் மருந்து கலத்தல் முதலிய முயற்சிகள் முடிந்த அளவு மேற்கொள்ளப்பட்டன.

THIRU D. V. D'MONTE: Sir, may I know how many deaths have occurred amongst children due to Gastro-Enteritis this year in the City of Madras?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டில் 1-1-1974 முதல் டிசம்பர் முடிய குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 796, அதில் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 20. அதைப்போல 1975 ஆம் ஆண்டிலே செப்டம்பர் மாதம் முடிய இந்த ஒன்பது மாத காலத்தில் குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1,035. அவர்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 28.

திரு. எல். பலராமன்: இந்த 'டயரியா' நோய் நகர்ப்புறங்களில் மட்டுமல்ல, கிராமப்புறப் பகுதிகளிலேயும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசினர் இது பற்றி ஆராய்ச்சி செய்ததாகத் தெரிகிறது. அதுபற்றிய தகவல் ஏதாவது மாநில அரசிடம் இருக்கிறதா? அந்த நோய் எந்தக் காரணத்தினால் வந்தது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசுக்கு இந்த நோயைப் பற்றிச் சம்பந்தமில்லை. மத்திய அரசுக்கு வேறு ஏதாவது அழற்சி நோய் ஏற்படலாம். மத்திய அரசு ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லை. சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகள் எல்லாம் மாநில அரசின் பொறுப்பிலேயே இருக்கின்றன. வேறு ஏதாவது பற்றி அவர்கள் ஆராய்ச்சி நடத்தியிருக்கக்கூடும். கிராமப் பகுதிகளிலேயும், நகரப் பகுதிகளில் சில நேரங்களிலேயும் இது காலரா என்று கருதப்படுகிறது. மேலும், இது போன்ற 'கேஸ்ட்ரோ என்டெரிடிஸ்' நோயும் மக்களிடத்திலே சில நேரம் ஏற்பட்டுவிடுகிறது.

திரு. கே. ராஜாராம்: இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில், இந்த நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை மட்டும் இருக்கிறதா அல்லது ஆஸ்பத்திரியில் சேர்க்காமலேயே வெளியில் இறந்து போனவர்கள் பற்றி ஜனன-மரணப் பதிவு செய்யும் அலுவலகத்திற்கு வந்த புள்ளிவிவரங்களும் சேர்ந்துள்ளதா என அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஜனன-மரணப் பதிவு அலுவலகத்தில் தகவல் கொடுக்கும்போது, இறந்து போனவர்கள் என்ன நோயால் இறந்து விட்டார்கள் என்ற விளக்கங்கள் கொடுப்பதில்லை. மருத்துவ மனையில் அட்மிட் செய்யப்பட்டு அங்கு இறந்தால்தான், இவர்கள் இந்த நோயால் இறந்தார்கள் என்ற சரியான புள்ளிவிவரம் கிடைக்கும்.

திரு. கே. ராஜாராம்: மருத்துவமனைக்கு வராமல் இந்த நோயினால் குழந்தைகள் மரணமடைந்திருக்கலாம். அதுபற்றிய விவரம் ஏதாகிலும் இருக்கிறதா? இந்நோய் பரவாமலிருப்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எப்போதும் புள்ளி விவரங்கள் தருவது என்றாலே, சரியான அளவில் இருந்தால்தான் தரமுடியும், பொதுவாக அப்படியே சில குழந்தைகள் வெளியில் இந்த நோயின் மூலம் இறந்திருந்தாலும், என்ன காரணத்தினால், அல்லது என்ன நோயால் இந்தக் குழந்தைகள் இறந்துபோனார்கள் என்ற சரியான தகவலை உறவினர்களோ, மற்றவர்களோ தெரிவிக்காதபோது, அதுபற்றிய சரியான புள்ளிவிவரம் தருவது இயலாது. இந்த நோய் இருப்பதற்குக் காரணம், பொதுவாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு, குடிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டதே. அரசு எப்படியும் நல்ல தண்ணீர் கிடைக்கவேண்டும் என்று எடுத்த தக்க நடவடிக்கைகளின் காரணமாகத்தான், 800 பேர்கள் ஆயிரம் பேர்கள் என்று இருக்கிறதே தவிர, இல்லாவிட்டால், ஐயாயிரம், பத்தாயிரம் என்ற அளவுக்குப் போயிருக்கும். கடுமையான வறட்சி நாட்டில் 1½ வருட காலம் இருந்தது. சென்னை நகரில் ஓர் ஆண்டுக்காலம் குடிநீர் பற்றாக்குறை கடுமையான முறையில் இருந்தது. மாநகராட்சியும், அரசாங்கமும் சேர்ந்து திட்டமிட்டு பெரும் செலவிலே திட்டமிட்டு கடமையாற்றி குடிநீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பள்ளிகளிலும், குடிசைகளிலும் சிறப்பாக வசதி செய்து கொடுத்து அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்குத் தேவைப்படும் குடிநீரைச் சேகரித்து வைத்து உபயோகப்படுத்தினார்கள். முற்றிலும் தண்ணீர் இல்லை என்ற நிலை சில சமயம் வந்தபோது, அவர்கள் கிணற்று நீரையும், மற்றும் குழாய் நீரையும் குடித்ததன் மூலமாகத்தான் இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்

1975 நவம்பர் 7]

கிறது. அரசு எடுத்த இந்தத் தீவிர நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த அளவுக்குக் குறைவாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படி நோயே வரக்கூடாதென்றால், எப்போதுமே வறட்சியோ தண்ணீர் பஞ்சமோ ஏற்படக் கூடாது.

Assignment of House-sites and Cultivable Lands to Villagers.

* 88. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(*a*) whether it is a fact that 32 families residing in Bethelpuram Village near Parapala Dam site in Palani Taluk, who had come from various villages for kumari cultivation on promises of assignment of house-sites and cultivable lands have not been assigned any house-sites or other lands;

(*b*) whether they offered peaceful Satyagraha during April–May 1975, to secure fulfilment of the promises made to them; and

(*c*) the details and the outcome thereof?

கிராமவாசிகளுக்கு வீட்டு மனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரல்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டுமனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரப்படும் என்று அளித்த உறுதிமொழிகளின்பேரில் பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து குமரி சாகுபடி செய்வதற்காக பழனி வட்டம், பரப்பலா அணைக்கட்டுப் பகுதிக்கு அருகேயுள்ள பெதல்புரம் கிராமத்தில் குடியேறியுள்ள 32 குடும்பங்களுக்கு, வீட்டுமனைகள் அல்லது ஏனைய நிலங்கள் ஒதுக்கித்தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) அவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு கோரி 1975-ஆம் ஆண்டு ஏப்ரல்-மே திங்களில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தார்களா?

(உ) அதன் விவரங்களும், அதன் விளைவும் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.